# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.193/மா/2025
நாள் 16.12.2025

B. இரமேஷ்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
திருவண்ணாமலை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண் 222 என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு. B.இரமேஷ் என்பவரின் 27.05.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.05.2025 அன்று பெறப்பட்டு 193/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, உயர்நீதிமன்ற வளாகம், புதிய கூடுதல் சட்ட அறை, எண் 222 என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு. B. இரமேஷ் என்பவர் 27.05.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"நானும் என் சகோதரி குடும்பத்தினரும் சென்னையில் வசித்து வருகிறோம். நானும் என் சகோதரி குடும்பத்தினரும் TN 07 CX 6454 என்ற எண் கொண்ட சொந்த காரில் கடந்த 15.01.2025 அன்று மதியம் சென்னையிலிருந்து புறப்பட்டு அன்றைய தினமே இரவு 7.40 மணிக்கு திருவண்ணாமலையை அடைந்து திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவில் அருகே உள்ள ஹோட்டல் அருணாச்சலாவில் அறை எண்.101 மற்றும் 116ல் தங்கினோம். (Hotel Receipt Bill No.BC0929). எங்களுடைய காரை மேற்படி ஹோட்டலில் பார்கிங் ஏரியாவில் நிறுத்தினோம். பிறகு கடந்த 16.01.2025 அன்று காலை செங்கம் காரில் சென்று விட்டு அன்றைய தினமே காலை சுமார் 9.15 மணிக்கு திருவண்ணாமலை அம்மணியம்மன் கோவில் தெரு வழியாக ஹோட்டல் அருணாச்சலாவுக்கு திரும்பி கொண்டிருந்தோம். அப்போது வழியில் பெயர் தெரியாத ஒரு நபர் எங்கள் காரை வழிமறித்து கட்டாயப்படுத்தி கார் நுழைவுக் கட்டணமாக ரூ.80/– வசூலித்தார். மேற்படி நபர் என்னிடமும், என் குடும்பத்தினரிடமும் மரியாதைக் குறைவாக பேசி நடந்து கொண்டார். மேற்படி நபர் எங்களுக்கு வழங்கிய நுழைவுக்கட்டண ரசீது எண்.46 ஆகும். மேற்படி நுழைவுக் கட்டண ரசீதில் எங்களுடைய கார் எண் மற்றும் தேதி குறிப்பிடப்படவில்லை. மேற்படி நுழைவுக்கட்டண ரசீது திருவண்ணாமலை மாநகராட்சி பெயரில் அடிக்கப்பட்டிருந்தது. அதில் ஒப்பந்ததாரர் வி.செல்வி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இரசீதில் திருவாண்ணாமலை மாநகராட்சி முத்திரை இல்லை.

திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி.செல்வி என்பவர் திருவண்ணாமலை மாநகராட்சியுடன் மேற்கொண்ட குத்தகை உரிம நிபந்தனைகளின் அடிப்படையில் என்னுடைய காருக்கு ரூ.20/– மட்டுமே நுழைவுக் கட்டணமாக வசூலித்திருக்க வேண்டும். ஆனால் மேற்படி ஒப்பந்ததாரர் செல்வி சட்டத்திற்கு புறம்பாக மூன்று மடங்கு கட்டணம் கூடுதலாக சேர்த்து அதாவது ரூ.80/– வசூலித்துள்ளார். இந்த விவரம் தகவல் பெறும் உரிமைச் சட்டம் வாயிலாக எனக்கு தெரிய வந்தது. இதனால் தனி நபரான எனக்கு பொருள் இழப்பு ஏற்பட்டுள்ளதுடன் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் சட்டத்திற்கு புறம்பாக ஒப்பந்ததாரர் வசூலித்த கூடுதல் தொகை ரூ.60/– என்பது சட்டப்படி கணக்கில் கொண்டு வரப்படாமல் வருமான வரித் துறையை (Income Tax Department) ஒப்பந்ததாரர் செல்வி ஏமாற்றியுள்ளார். என்னைப் போன்று ஆயிரக்கணக்கான நபர்களிடம் மேற்படி ஒப்பந்ததாரர் கார் நுழைவுக் கட்டணமாக சட்டத்திற்கு புறம்பாக ரூ.80/– (ஒரு காருக்கு) வசூலித்திருக்கக் கூடும். மேற்படி ஒப்பந்ததாரர் செல்வி என்பவரின் சட்டத்திற்கு புறம்பான செயலால் எனக்கு மிகுந்த மனவேதனையும், மனவுளைச்சலும் ஏற்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் செல்வி என்பவர் திருவண்ணாமலை மாநகராட்சியுடன் மேற்கொண்ட குத்தகை உரிம நிபந்தனைகளுக்கு புறம்பாக போலி இரசீது அடித்து கார் நுழைவுக் கட்டணமாக என்னுடைய காருக்கு ரூ.80/– வசூலித்துள்ளார்.

நான் கடந்த 20.01.2025 தேதியில் என்னிடம் திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி. செல்வி என்பவர் சட்டத்திற்கு புறம்பாக வசூலித்த ரூ.80/– குறித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியும், என்னிடம் வசூலித்த இந்த தொகையை திருப்பி அளிக்க வேண்டியும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையருக்கும் அஞ்சலில் புகார் மனு அனுப்பியிருந்தேன். அதனை பெற்றுக் கொண்ட மேற்படி இருவரும் இதுநாள் வரை என் புகாரின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதிலிருந்தே சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரும், திருவண்ணாமலை நகராட்சி ஆணையரும் மேற்படி திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி. செல்வியின் சட்டவிரோத செயலுக்கு உடந்தை என்பது தெளிவாகிறது.

மேலும், தகவல் பெறும் உரிமைச்சட்டம் வாயிலாக திருவண்ணாமலை மாநகராட்சி கடந்த 03.03.2025 தேதியில் எனக்கு அளித்த ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி.செல்வி திருவண்ணாமலை நகராட்சி எல்லைக்குள் நுழையும் சுற்றுலா கார் ஒன்றுக்கு ரூ.20/– மட்டுமே நுழைவு கட்டணமாக வசூலிக்க வேண்டும். ஆனால் மேற்படி ஒப்பந்ததாரர் செல்வி என்னிடம் சட்டத்திற்கு புறம்பாக மோசடி ரசீது தயார் செய்து ரூ.80/– வசூலித்துள்ளார். இந்த மோசடி ரசீதில் திருவண்ணாமலை மாநகராட்சி முத்திரை இல்லை. இந்த ஒப்பந்ததாரர் என்னிடம் வசூலித்திருப்பதைப் போன்று ஏராளமான சுற்றுலா வாகனங்களிடம் கடந்த 2024–2025 நிதி ஆண்டில் போலி ரசீது அடித்து இலட்சக் கணக்கில் பணம் வசூலித்திருக்க வேண்டும். இவரது முறைகேடுகளுக்கு திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையரும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரும் உடந்தை என்பது நான் அளித்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்காததிலிருந்து தெரியவருகிறது. மேற்படி திருவண்ணாலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி. செல்வி என்பவர் ஒப்பந்த நிபந்தனைகளுக்கு புறம்பாக செயல்பட்டு சுற்றுலா வாகனங்களுக்கு சட்டவிரோதமாக கூடுதல் நுழைவு கட்டணம் வசூலித்துள்ளார். இதனால் திருவண்ணாமலை மாநகராட்சிக்கும், தமிழக அரசுக்கும் ஏராளமான வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் தயவு கூர்ந்து மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டு என்னுடைய 20.01.2025 தேதியிட்ட புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்காத சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் மீது கடமை

தவறிய குற்றத்திற்காக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி. செல்வி என்பவர் சட்டத்திற்கு புறம்பாக சுற்றுலா வாகனங்களுக்கு வசூலித்த போலி நுழைவுக் கட்டண ரசீது தொடர்பாக குற்றவியல் வழக்கு தொடர சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும், மேலும் என்னிடம் மேற்படி திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி. செல்வி என்பவர் கூடுதலாக வசூலித்த ரூ.60/– ஐ எனக்கு திருப்பியளிக்க தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் நியாயமென கருதும் இன்னபிற உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் நீதியின் பெயரால் தங்களை நான் பிராத்திக்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 16.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் தனது 22.10.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 2848/2025/அ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

“திரு.B.இரமேஷ் வழக்குரைஞர் என்பவர் தனது 14.05.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பில், தனது சகோதரி குடும்பத்தினுடன் TN07 CX 6454 என்ற காரில் கடந்த 15.01.2025–ம் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்டு காலை 07.40 மணிக்கு திருவண்ணாமலை ஸ்ரீஅண்ணாமலையார் திருக்கோவில் அருகில் உள்ள அருணாச்சலா ஹோட்டலில் வந்து தங்கும் விடுதியிலுள்ள உள்ள பார்க்கிங் இடத்தில் காரை நிறுத்தி விட்டு, மறுநாள் 16.01.2025 அன்று காலை செங்கத்திற்கு சென்று அன்றைய தினம் காலை 09.15 மணிக்கு அம்மணியம்மன் கோபுரம் (வடஒத்தவாடத்தெரு) வழியாக ஹோட்டலுக்கு திரும்பி வரும்போது அந்த வழியில் பெயர் தெரியாத ஒரு நபர் எங்கள் காரை வழி மறித்து கட்டாயப்படுத்தி கார் நுழைவுக் கட்டணமாக ரூ.80/– வசூலித்துக்கொண்டு தன்னிடமும், தனது குடும்பத்தினரிடமும் மரியாதைக் குறைவாக பேசியது, தங்களுக்கு வழங்கப்பட்ட நுழைவுக்கட்டண ரசீது எண்.46ல் வாகனத்தின் எண் மற்றும் தேதி குறிப்பிடப்படாமலும், மற்றும் இம்மாநகராட்சி முத்திரை இல்லாமலும் ஒப்பந்ததாரர் திருமதி வி.செல்வி என்பவர், திருவண்ணாமலை மாநகராட்சி எல்லைக்குள் நுழையும் சுற்றுலா கார் ஒன்றுக்கு ரூ20/– மட்டுமே நுழைவுக் கட்டணமாக வசூலிக்க வேண்டும். ஆனால், மேற்படி ஒப்பந்ததாரர் சட்டத்திற்கு புறம்பாக மோசடி ரசீது தயார் செய்து ரூ.80/– வசூலித்துள்ளதாகவும், அவ்வாறு கூடுதலாக வசூலித்த ரூ.60/–ஐ திருப்பி தருவதுடன் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு கூடுதலாக நுழைவுக் கட்டணம் வசூலித்த ஒப்பந்ததாரர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் மனவேதனைக்கு இழப்பீடாக ரூ 2.00 இலட்சம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் மனவேதனைக்கு தகுந்த இழப்பீடு கேட்டு தங்கள் அனைவரும் மீதும் சென்னை மாவட்ட நுகர்வோர் குறைதீர் நீதிமன்றத்தில் (Consumer Court) தான் தங்கள் செலவில் வழக்கு தொடர்ந்து உரிய பரிகாரம் பெற நேரிடும் என இதன் மூலம் அனைவருக்கும் தன்னால் அறிவுறுத்தப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

16.06.2025 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் கடிதத்திற்கு உரிய பதிலறிக்கை கீழ்க்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இம்மாநகராட்சி எல்லைக்குள் வருகின்ற அனைத்து சுற்றுலா வாகனங்களுக்கும் நுழைவுக் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமத்திற்கான இம்மாமன்றத் தீர்மான எண்.435, நாள் 19.02.2024ன்படி 2024–2025 முதல் 2026–2027 ஆண்டு வரை மூன்றாண்டிற்கான குத்தகை உரிமம் திருமதி.V.செல்வி அவர்களுக்கு இம்மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க. எண் 3524/2024/அ1, நாள் 30.03.2024 ஆம் தேதியன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள

கட்டணத்தை மட்டுமே வசூல் செய்யப்பட வேண்டும் என உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கட்டண விவரம் கீழ்க்கண்டவாறு:–

| வ. எண். | வாகன விவரம் | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணம் ரூ. (நாள் 1க்கு) |
|---|---|---|
| 1 | நான்கு சக்கர வாகனங்கள் | 20 |
| 2 | வேன்கள் | 25 |
| 3 | சுற்றுலா பேருந்துகள் | 40 |
| 4 | JCB மணல் லாரி மற்றும் கனரக வாகனங்கள் | 40 |

மேலும், இம்மாமன்ற தீர்மானத்தின்படி, மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாக கட்டணம் வசூலிப்பதாக வரப்பெற்ற புகார் மீது விசாரணை செய்யப்பட்டதில், மேற்படி திருமதி V.செல்வி ஒப்பந்ததாரர் என்பவர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை மற்றும் இம்மாநகராட்சி குத்தகை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி, மாநகராட்சியின் முத்திரையினை ஒப்பந்ததாரரால் வழங்கப்படும் இரசீதுகளில் தவறாமல் அச்சிட்டு வழங்கப்பட வேண்டும் என்ற விதியை முழுமையாக பின்பற்றி நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மட்டுமே முறையாக வசூலித்து வருகிறார்.

மேலும், திருவண்ணாமலையில் அமைந்துள்ள ஸ்ரீஅண்ணாமலையார் கோவிலுக்கு வரும் பக்தர்கள் கடந்த சில ஆண்டுகளாக அதிகளவில் கார் மற்றும் வேன்களில் (வெளிமாநிலங்கள் வாகனங்கள் உட்பட) வருவதால், போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாக உள்ளதை ஊடகங்கள் மூலம் அனைவரும் அறிந்தவையாகும். இதனை கருத்தில் கொண்டு இம்மாநகராட்சியால், ஒன்பது வழித்தடங்களிலும், தற்காலிகமாகவும், மற்றும் நிரந்தரமாகவும் அனைத்து வாகனங்களை பார்க்கிங் செய்ய பாதுகாப்பான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்படி மனுதாரரும் அவரது சகோதரி குடும்பத்தினரும் சென்னையிலிருந்து TN07 CX 6454 என்ற காரில் வந்ததாகவும், ஸ்ரீஅண்ணாமலையார் திருக்கோவில் அருகேயுள்ள ஹோட்டல் அருணாச்சலாவில் தங்கியிருந்ததாகவும், ஹோட்டலுக்கு சம்பந்தப்பட்ட கார் நிறுத்துமிடத்தில் நிறுத்தியதாகவும் மனுதாரரே ஒப்புக் கொண்டுள்ளார்.

மேலும் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் தற்போது ஸ்ரீஅண்ணாமலையார் திருக்கோவிலை சுற்றியுள்ள மாடவீதிகளில் மிகவும் அதிநவீன சிறப்புத் தன்மையுடன் புதியதாக கான்கிரிட் சாலை போடப்பட்டு வருவதால், அப்பகுதியிலுள்ள குடியிருப்புதாரர்களின் நான்கு சக்கர வாகனங்கள் உள்ளே நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால், வெளியூரிலிருந்து வரும் அனைத்து பக்தர்களும் தங்களுடைய வாகனங்களை பார்க்கிங் செய்ய இம்மாநகராட்சியால் ஒதுக்கப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்துவதற்கு திருவண்ணாமலை மாவட்ட காவல் துறையினரால் சம்பந்தப்பட்ட இடத்தில் தடுப்புவேலி (Barri cading) ஏற்படுத்தப்பட்டு, அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பர பதாகைகள் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ளது. இதனால், அனைவரும் திருக்கோவிலுக்கு செல்வதற்கு நடந்து அல்லது ஆட்டோவில்தான் செல்லக்கூடிய நிலையுள்ளது. இந்நிலையில், மனுதாரர் சட்ட விதிகளை மீறும் வகையில் நடந்துள்ளார் என்பதனை மனுதாரரின் மனுவின் மூலம் தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது.

இந்நிலையில் மனுதாரர் தனது மனுவில் கடந்த 15.01.2025–ம் தேதியன்று இரவு 7.40 மணியளவில் வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், அச்சமயத்தில் கோவில் பகுதி முழுவதும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் நேரத்தில், இரவு 9.15 மணியளவில்

அம்மணியம்மன் கோவிலுக்கு வரும் தெரு வழியாக ஹோட்டல் அருணாச்சலாவுக்கு திரும்பி கொண்டிருந்த போது பெயர் தெரியாத நபர் காரை வழிமறித்து கட்டாயப்படுத்தி நுழைவு கட்டணம் பெற்றுள்ளார் எனவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மேலும் 20.05.2025, 02.06.2025, 30.07.2025 மற்றும் 06.08.2025 நாளிட்ட திருவண்ணாமலை மாநகராட்சியின் அறிவிப்பு கடிதங்கள் மூலம் ஒப்பந்ததாரர் திருமதி.V.செல்வி அவர்களை நேரில் அழைத்து விசாரித்த போது, ஸ்ரீஅண்ணாமலையார் கோவிலுக்கு வரும் பக்தர்கள் கூட்டம் சில ஆண்டுகளாக மிக அதிகமாக வருகின்ற காரணத்தினால், சில மோசடி பேர்வழிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி, இம்மாநகராட்சியின் ஒப்பந்ததாரர் பெயர் கொண்ட போலி ரசீது புத்தகங்களை அச்சடித்து அதிக கட்டணத்தை வசூலித்து வரும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு திருமதி.V.செல்வி, ஒப்பந்ததாரர் திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். C.S.R.No.188/2025 இப்புகார் மீது தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது என தெரிவித்துள்ளார்.

மேலும், இப்புகார் குறித்து தொடர் விசாரணை நடைபெற்று வருவதால், மேற்காணும் பொருள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் எடுக்கும் நடவடிக்கையினை ஏற்று உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 29.10.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 29.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''சென்னையிலிருந்து நானும் என் சகோதரி குடும்பத்தினரும் TN07 CX 6454 என்ற எண் கொண்ட எனது காரில் 15.01.2025 புறப்பட்டு அன்று இரவு 7.40 மணிக்கு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் அருகே உள்ள ஹோட்டல் அருணாச்சலாவில் அறை எண்.101 மற்றும் 116ல் தங்கினோம். எங்கள் காரை ஹோட்டல் உள்ள பார்கிங் ஏரியாவில் நிறுத்தினோம். 16.01.2025 அன்று காலை செங்கம் சென்று விட்டு அன்றைய தினமே காலை சுமார் 9.15 மணிக்கு திருவண்ணாமலை அம்மணியம்மன் கோவில் தெரு வழியாக ஹோட்டல் அருணாச்சலாவுக்கு சென்று கொண்டிருந்தோம். வழியில் பெயர் தெரியாத ஒரு நபர் எங்கள் காரை வழி மறித்து கட்டாயப்படுத்தி கார் நுழைவுக் கட்டணமாக ரூ.80/– வசூலித்தார். அவர் என்னிடமும், என் குடும்பத்தினரிடமும் மரியாதைக்குறைவாக பேசினார், அவர் வழங்கிய நுழைவுக்கட்டண ரசீது எண்.46ல் எங்களுடைய கார் எண் மற்றும் தேதி குறிப்பிடப்படவில்லை. அந்த ரசீது திருவண்ணாமலை மாநகராட்சி பெயரில் அச்சடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரர் வி.செல்வி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இரசீதில் திருவாண்ணாமலை மாநகராட்சி முத்திரை இல்லை.

திருவண்ணாமலை மாநகராட்சி ஒப்பந்ததாரர் வி.செல்வி குத்தகை உரிம நிபந்தனைகளின் அடிப்படையில் என்னுடைய காருக்கு ரூ.20/– மட்டுமே நுழைவுக் கட்டணமாக வசூலித்திருக்க வேண்டும். ஆனால் ஒப்பந்ததாரர் வி.செல்வி சட்டத்திற்கு புறம்பாக 3 மடங்கு கூடுதலாக கட்டணம் ரூ.80/– வசூலித்துள்ளார். இந்த விவரம் தகவல் பெறும் உரிமைச் சட்டம் வாயிலாக எனக்கு தெரிய வந்தது. இதனால் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனக்கு பொருள் இழப்பு ஏற்பட்டதுடன் சட்டத்திற்கு புறம்பாக வசூல் செய்த ரூ.60/– சட்டப்படி கணக்கில் கொண்டு வரப்படாமல் வருமான துறையை (Income Tax Department) ஏமாற்றியுள்ளார். என்னைப் போன்று

ஆயிரக்கணக்கான நபர்களிடம் சட்டத்திற்கு புறம்பாக ரூ.80/– (ஒரு காருக்கு) வசூலித்துள்ளார். இதனால் எனக்கு மனவேதனையும், மன ஊளைச்சலும் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் வி.செல்வி திருவண்ணாமலை மாநகராட்சியுடன் குத்தகை உரிமை நிபந்தனைகளுக்கு புறம்பாக போலி இரசீது தயார் செய்து கார் நுழைவு கட்டணமாக ஒவ்வொரு காருக்கு ரூ.80/– வசூலித்துள்ளார். 20.01.2025 தேதியில் என்னிடம் வசூல் செய்த ரூ.80/– குறித்து தக்க நடவடிக்கை அவர் மீது எடுத்து வசூலித்த தொகையினை திருப்பி அளிக்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையருக்கும் அஞ்சலில் புகார் மனு அனுப்பியிருந்தேன். அதனை பெற்றுக் கொண்ட மேற்படி இருவரும் இது நாள் வரை என் புகாரின் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்படி இருவரும் ஒப்பந்ததாரர் வி.செல்வியின் சட்டவிரோத செயலுக்கு உடந்தையாக இருப்பது தெளிவாகிறது.

தகவல் பெறும் உரிமைச்சட்டம் வாயிலாக திருவண்ணாமலை மாநகராட்சி 03.03.2025 தேதியில் எனக்கு அளித்த ஆவணங்களின்படி ஒப்பந்ததாரர் வி.செல்வி கார் ஒன்றுக்கு ரூ.20/– மட்டுமே நுழைவு கட்டணமாக வசூலிக்க வேண்டும். சட்டத்திற்கு புறம்பாக மோசடி ரசீது தயார் செய்து ரூ.80/– வசூலித்துள்ளார். சுற்றுலா வாகனங்களிடம் கடந்த 2024–2025 நிதி ஆண்டில் போலி ரசீது அடித்து இலட்சக் கணக்கான பணம் வசூலித்துள்ளார். இதற்கு திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையரும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரும் உடந்தையாக செயல்படுவது குறித்தும் என் புகாரின் மீது நடவடிக்கை எடுக்காதது குறித்தும், மேற்படி ஒப்பந்ததாரர் வி.செல்வி ஆகியோர் மீது மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் தயவு கூர்ந்து மேற்படி நிகழ்வுகளை கருத்தில் கொண்டும், கடமை செய்ய தவறிய சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர், போலி ரசீது தயார் செய்த ஒப்பந்ததாரர் வி.செல்வி மீதும் தகுந்த விசாரணை செய்தும், போலி நுழைவு கட்டண ரசீது தொடர்பாக குற்றவியல் வழக்கு தொடர சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும் என்னிடம் வசூலித்த ரூ.60/– ஐ எனக்கு திருப்பி அளிக்க நடவடிக்கை எடுக்குமாறும், மேலும் நியாயம் என கருதும் இன்ன பிற உத்தரவுகளை பிறப்பிக்குமாறும் நீதியின் பெயரால் தங்களை பிராத்திக்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் திருவண்ணாமலை மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் 29.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''மனுதாரர் திரு.B.இரமேஷ் தனது சகோதரி குடும்பத்தினரும் TN07 CX 6454 காரில் 15.01.2025 சென்னையிலிருந்து புறப்பட்டு காலை 7.40 மணிக்கு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் அருகே உள்ள அருணாச்சலா ஹோட்டலில் தங்கும் விடுதியிலுள்ள பார்கிங் இடத்தில் காரை நிறுத்தி விட்டு மறுநாள் 16.01.2025 அன்று காலை செங்கத்திற்கு சென்று விட்டு அன்றைய தினமே காலை சுமார் 9.15 மணிக்கு அம்மணியம்மன் கோபுரம் (வடஒத்தவாடத் தெரு) வழியாக ஹோட்டலுக்கு திரும்பி வரும் போது அந்த வழியில் பெயர் தெரியாத ஒரு நபர் எங்கள் காரை வழி மறித்து கட்டாயப்படுத்தி கார் நுழைவுக் கட்டணமாக ரூ.80/– வசூலித்துக்கொண்டு தன்னிடமும், தனது குடும்பத்தினரிடமும் மரியாதைக்குறைவாக பேசியது, தங்களுக்கு வழங்கப்பட்ட நுழைவுக்கட்டண ரசீது எண்.46ல் வாகனத்தின் எண் மற்றும் தேதி குறிப்பிடப்படாமலும் மற்றும் இம்மாநகராட்சி முத்திரையில்லாமலும் ஒப்பந்ததாரர் வி.செல்வி என்பவர் திருவண்ணாமலை மாநகராட்சி எல்லைக்குள் நுழையும் சுற்றுலா கார் ஒன்றுக்கு ரூ20/– மட்டுமே நுழைவுக் கட்டணமாக வசூலிக்க வேண்டும். ஒப்பந்ததாரர் சட்டத்திற்கு புறம்பாக மோசடி ரசீது தயார் செய்து ரூ.60/– திருப்பி தருவதுடன் கூடுதலாக நுழைவு கட்டணம் வசூலித்த ஒப்பந்ததாரர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் மனவேதனைக்கு இழப்பீடாக ரூ 2.00 இலட்சம் வழங்க உரிய

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் மனவேதனைக்கு தகுந்த இழப்பீடு கேட்டு தங்கள் அனைவரும் மீதும் சென்னை மாவட்ட நுகர்வோர் குறைதீர் நீதிமன்றத்தில் (Consumer Court) தான் தங்கள் செலவில் வழக்கு தொடர்ந்து உரிய பரிகாரம் பெற நேரிடும் என இதன் மூலம் அனைவருக்கும் தன்னால் அறிவுறுத்தப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் கடிதத்திற்கு உரிய பதிலறிக்கை கீழ்க்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அனைத்து சுற்றுலா வாகனங்கள் நுழைவுக் கட்டணமாக வசூல் செய்வதற்கான உரிமைத்திற்கான இம்மாமன்ற தீர்மான எண்.435 நாள் 19.02.2024ன்படி 2024–2025 முதல் 2026–2027 ஆண்டு வரை 3 ஆண்டிற்கான குத்தகை உரிமம் திருமதி.V.செல்வி அவர்களுக்கு இம்மாநகராட்சி ஆணையர் செயல்முறை ஆணை நாள் 30.03.2024 தேதியன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் மட்டும் வசூல் செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வாகன விவரம் | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணம் ரூ. (நாள் 1க்கு) |
|---|---|---|
| 1. | நான்கு சக்கர வாகனங்கள் | 20 |
| 2. | வேன்கள் | 25 |
| 3. | சுற்றுலா பேருந்துகள் | 40 |
| 4. | JCB மணல் லாரி மற்றும் கனரக வாகனங்கள் | 40 |

இம்மாமன்ற தீர்மானத்தின்படி மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாக கட்டணம் வசூலிப்பதாக புகார் மீது விசாரணை செய்யப்பட்டதில், திருமதி V.செல்வி ஒப்பந்ததாரர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை மற்றும் இம்மாநகராட்சி குத்தகை ஏல / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி மாநகராட்சியின் முத்திரையினை ஒப்பந்ததாரரால் வழங்கப்படும் இரசீதுகளில் தவறாமல் அச்சிட்டு வழங்கப்பட வேண்டும் என்ற விதியை முழுமையாக பின்பற்றி நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மட்டுமே முறையாக வசூலித்து வருகிறார். மேலும் அறிவிப்பு கடிதம் மூலம் ஒப்பந்ததாரர் திருமதி.V.செல்வி நேரில் அழைத்து விசாரித்த போது கோவிலுக்கு வரும் பக்தர்கள் கூட்டம் சில ஆண்டுகளாக மிக அதிகமாக வருகின்ற காரணத்தினால், சில மோசடி பேர்வழிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி இம்மாநகராட்சியின் ஒப்பந்ததாரர் பெயர் கொண்ட போலி ரசீது புத்தகங்களை அச்சடித்து அதிக கட்டணத்தை வசூலித்து வரும் நபர்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறு திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். C.S.R.No.188/2025-ன்படி இப்புகார் மீது தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

இப்புகார் குறித்து தொடர் விசாரணை நடைபெற்று வருவதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் எடுக்கும் நடவடிக்கையினை ஏற்று உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என பணிவுடன் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வருவாய் ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

''மனுதாரர் சென்னையிலிருந்து தன் சகோதரி குடும்பத்தினருடன் TN07 CX 6454 என்ற எண் கொண்ட தனது காரில் 15.01.2025 அன்று இரவு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் அருகே உள்ள ஹோட்டல் அருணாச்சலாவில் தங்கி, பின்னர்

செங்கம் சென்று திரும்பி வந்து கொண்டிருந்த போது, திருவண்ணாமலையில் அம்மணியம்மன் கோவில் தெருவில் பெயர் தெரியாத ஒரு நபர் மனுதாரரின் காரை வழி மறித்து கட்டாயப்படுத்தி கார் நுழைவுக் கட்டணமாக ரூ.20 பதிலாக ரூ.80/– என அதிகமாக வசூலித்தும், அவரிடமும், குடும்பத்தினரிடமும் மரியாதைக்குறைவாக பேசியதாகவும், அவர் வழங்கிய நுழைவுக்கட்டண ரசீது எண்.46ல் தங்களுடைய கார் எண் மற்றும் தேதி குறிப்பிடப்படவில்லை என்பதும், அந்த ரசீது திருவண்ணாமலை மாநகராட்சி பெயரில் அச்சடிக்கப்பட்டு, அதில் ஒப்பந்ததாரர் வி.செல்வி என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்பதும், அந்த இரசீதில் திருவண்ணாமலை மாநகராட்சி முத்திரை இல்லை என்பதும், இதனால் தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதும், தனக்கு பொருள் இழப்பு ஏற்பட்டதுடன் சட்டத்திற்கு புறம்பாக வசூல் செய்த ரூ.60/– சட்டப்படி கணக்கில் கொண்டு வரப்படாமல் வருமான வரி துறையை (Income Tax Department) ஏமாற்றியுள்ளதாகவும், தன்னைப் போன்று ஆயிரக்கணக்கான நபர்களிடம் சட்டத்திற்கு புறம்பாக ரூ.80/– (ஒரு காருக்கு) வசூலித்துள்ளத்தால், தனக்கு மனவேதனையும், மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட ஒப்பந்தாரர் வி.செல்வி மீதும் தகுந்த விசாரணை செய்தும், போலி நுழைவு கட்டண ரசீது தொடர்பாக குற்றவியல் வழக்கு தொடர சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும், தன்னிடம் வசூலித்த ரூ.60/– ஐ தனக்கு திருப்பி அளிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகியது.

அனைத்து சுற்றுலா வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமைத்திற்கான மாமன்ற தீர்மான எண்.435 நாள் 19.02.2024ன்படி 2024–2025 முதல் 2026–2027 ஆண்டு வரை 3 ஆண்டிற்கான குத்தகை உரிமம் திருமதி.V.செல்வி அவர்களுக்கு திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் செயல்முறை ஆணை நாள் 30.03.2024–ல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:–

| வ. எண். | வாகன விவரம் | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டணம் ரூ. (நாள் 1க்கு) |
|---|---|---|
| 1. | நான்கு சக்கர வாகனங்கள் | 20 |
| 2. | வேன்கள் | 25 |
| 3. | சுற்றுலா பேருந்துகள் | 40 |
| 4. | JCB மணல் லாரி மற்றும் கனரக வாகனங்கள் | 40 |

அதில் குறிப்பிட்டுள்ள கட்டணம் மட்டும் வசூல் செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், ,இம்மாமன்ற தீர்மானத்தின்படி மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாக கட்டணம் வசூலிப்பதாக வந்த புகார் மீது விசாரணை செய்யப்பட்டதில், திருமதி V.செல்வி ஒப்பந்ததாரர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சி குத்தகை ஏல / ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி மாநகராட்சியின் முத்திரையினை ஒப்பந்ததாரரால் வழங்கப்படும் இரசீதுகளில் தவறாமல் அச்சிட்டு வழங்கப்பட வேண்டும் என்ற விதியை முழுமையாக பின்பற்றி நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மட்டுமே முறையாக வசூலித்து வருகிறார் என்பதும், அறிவிப்பு கடிதம் மூலம் ஒப்பந்ததாரர் திருமதி.V.செல்வி நேரில் அழைத்து விசாரித்த போது கோவிலுக்கு வரும் பக்தர்கள் கூட்டம் சில

ஆண்டுகளாக மிக அதிகமாக வருகின்ற காரணத்தினால், சில மோசடி பேர்வழிகள் தங்களுக்கு சாதகமாக அதனை பயன்படுத்தி மாநகராட்சியின் ஒப்பந்ததாரர் பெயர் கொண்ட போலி ரசீது புத்தகங்களை அச்சடித்து அதிக கட்டணத்தை வசூலித்து வரும் நபர்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறு திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் புகார் அளித்து, C.S.R.No.188/2025-ன்படி இப்புகார் மீது தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது என்பதும், இப்புகார் குறித்து தொடர் விசாரணை நடைபெற்று வருவதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் எடுக்கும் நடவடிக்கையினை ஏற்று உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வருவாய் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் திருவண்ணாமலைக்கு 15.01.2025 அன்று சென்ற பின்னர் 16.01.2025 அன்று காலை செங்கம் சென்று விட்டு அன்றே திருவண்ணாமலை அம்மணியம்மன் கோவில் தெரு வழியாக தான் தங்கியிருந்த திருவண்ணாமலையிலுள்ள ஓட்டல் அருணாச்சலாவுக்கு திரும்பும் போது பெயர் தெரியாத நபர் கார் நுழைவுக் கட்டணமாக ரூ.20/–க்கு பதிலாக ரூ.80/–ஐ கட்டாயமாக வசூலித்ததாக தெரிவித்து, இது குறித்த புகாரினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு 20.01.2025 தேதியிட்டு மனு அளித்தும், உரிய நடவடிக்கை எடுக்காமல் திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலர்கள் மெத்தனமாக இருந்தது கண்டிக்கத்தக்கது. மேலும் ஒப்பந்ததாரர் 29.05.2025 அன்று திருவண்ணாமலை காவல் நிலையத்தில் புகார் எண்.C.S.R.No.188/2025 பதிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டு அதன் பேரில் விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவித்து வேறு நடவடிக்கை மேற்கொள்ளாமல் மெத்தனமாக இருக்கும் திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலர்களின் நடவடிக்கை ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்20.01.2025 நாளிட்ட புகார் மனு மீது உடனடி நடவடிக்கை எடுக்காமல், 4 மாதங்கள் காலம் கடந்து மனுதாரரின் மனு மீது நடவடிக்கை எடுத்த சம்பந்தப்பட்ட திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலர்களின் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரர் புகார் குறித்து, தலைமையிடத்து கூடுதல் இயக்குநர் அளவில் விசாரணை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.B.இரமேஷ்
வழக்குரைஞர்,
222, புதிய கூடுதல் சட்ட அறை,
உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–600 104.

(2) ஆணையர்,
திருவண்ணாமலை மாநகராட்சி,
திருவண்ணாமலை–606 601.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்